சொந்தக் கட்சியிலேயே மிகப்பெரிய போதை மாஃபியாவை வைத்துக்கொண்டு

த.வெ.க. தலைவர் ஊருக்கு உபதேசம் செய்வதா?

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் கேள்வி!

சென்னை, அக்.19 -

“சொந்தக் கட்சியிலேயே மிகப் பெரிய போதை மாஃபியாவை வைத் துக் கொண்டுதான் த.வெ.க. தலைவர் ஊருக்கு உபதேசம் செய்தாரா?” என்று கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கேள்வி எழுப்பியுள்ளார்.

தமிழ்நாட்டில் நிர்வாக திறமை யற்ற சோபா மாடல் விஜய் தலைமை யிலான த.வெ.க. ஆட்சி பொறுப்பு ஏற்றது. முதல் கொலை, கொள்ளை, வழிப்பறி, போதைப் பொருள் கடத் தல், விற்பனை என நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

இந்நிலையில் ஒன்றிய நிதி அமைச்சகத்தின் கீழ் செயல்பட்டு வரும் வருவாய் குற்றப்பிரிவு புல னாய்வு துறை திருச்சி மண்டல அதிகாரிகளுக்கு நாகையில் இருந்து இலங்கைக்கு சர்வதேச போதைப் பொருளான மெத்தபெட்டமைன் கடத் துவதாக ராமநாதபுரம் மாவட்டத்தில் இருந்து தகவல் வந்தது.

இதையடுத்து நேற்று முன்தினம் (16ம் தேதி) நாகப்பட்டினம் மாவட்டம் வேளாங்கண்ணி அருகே பிரதாபராம புரம் நடுத்தெருவைச் சேர்ந்த சுகன் என்பவர் வீட்டிற்கு 16 பேர் கொண்ட



அதிகாரிகள் 4 காரில் வந்தனர்.

அந்த அதிகாரிகள் குழுவினர் சுகன் அவரது சகோதரர்கள், பெற் றோர் மற்றும் நண்பர்கள் என அனைவரிடமும் காலை 10 மணி வரை விசாரணை மேற்கொண்ட னர். இதில் சுகன் வீட்டில் பதுக்கி வைத்திருந்த சர்வதேச சந்தை மதிப் பில் ரூ.100 கோடி மதிப்பிலான 135 கிலோ மெத்த பெண்டமைன் என்ற சர்வதேச போதைப்பொருள் இலங் கைக்கு கடத்த இருந்ததை கண்டு பிடித்தனர்.

மேலும் இந்த கடத்தலுக்கு மூளையாக நாகப்பட்டினம் மாவட்ட த.வெ.க. செயற்குழு உறுப்பினரும், வழக்கறிஞருமான வேளாங் கண்ணி அருகே கீழப்பிடாகை சிந் தாமணி மெயின் ரோட்டை சேர்ந்த பூபாலன் (42) செயல்பட்டது தெரிய வந்தது.

பூபாலன் நடந்து முடிந்த சட்ட சபை தேர்தலில் கீழ்வேளூர் தொகு தியில் த.வெ.க. சார்பில் போட்டியிட விருப்ப மனு கட்சி தலைமையிடத் தில் கொடுத்திருந்தார். மேலும் த.வெ.க. சார்பில் மாவட்டத்தில் நடை பெறும் பல்வேறு போராட்டம், கூட் டங்களில் பங்கு பெற்றுள்ளார்.

போதை ஒழிப்பா? போதை ஒளிப்பா?

இதுகுறித்து நேற்று (17.10.2026), கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ள சமூக வலை தளப் பதிவு வருமாறு: -

“TVK = Bad Party மட்டுமல்ல, Breaking Bad Party

ஒன்றிய அரசின் DRI அதிகாரி களால் நாகை மாவட்டத் த.வெ.க. நிர்வாகியும் கீழ்வேளூர் சட்டமன் றத் தொகுதியின் தேர்தல் பொறுப் பாளருமான பூபாலன் கைது செய் யப்பட்டுள்ளார்.

போதை ‘ஒழிப்பு’ பற்றி முதல மைச்சர் மேடைதோறும் பாட மெடுத்து வருவதை, போதை ‘ஒளிப்பு’ எனத் தவறாகப் புரிந்து கொண்டு 135 கிலோ மெத்தம்பெட டமைன் போதைப் பொருளை ஒளித்து வைத்திருந்ததுதான் அவர் செய்துள்ள குற்றம் என முதற்கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது. கேரியரின் உச்சத் தில் இருந்தபோது தொக்காக மாட் டியுள்ளார்.

சொந்தக் கட்சியிலேயே மிகப் பெரிய போதை மாபியாவை வைத் துக்கொண்டுதான் த.வெ.க. தலை வர் ஊருக்கு உபதேசம் செய்து கொண்டிருந்தாரா?

மொத்த Networkஐயும் சுற்றி வளைக்க வேண்டும்!

ஒரே சோதனையில் இந்த அள வுக்கு போதைப்பொருள் சிக்கி யிருக்கிறதென்றால், இவர்களின் பின்னால் இன்னும் எத்தனை பேர் இருக்கிறார்கள் எனக் கண்ட றிந்து மொத்த Networkஐயும் சுற்றி வளைக்க வேண்டும்.

தாசில்தார் மூலமாகக் கம்யூ னிஸ்டுகளைக் கணக்கெடுப்பதற்கு பதிலாக, மாவட்டத்துக்கு மாவட் டம் இப்படி எத்தனை லியோதாஸ் களும், பவுடர் சரத்களும் த.வெ.க.வில் இருக்கிறார்கள் என முதலில் கணக்கெடுங்கள்.



Breaking Bad Partyயாக Promotion பெற்றுள்ளது!

ஆட்சிக்கு வந்த ஐந்தே மாதங் களில் Bad Party என்று பெயரெ டுத்திருந்த த.வெ.க., அடுத்தகட்ட மாக Breaking Bad Partyயாக Promotion பெற்றுள்ளது.

“பயமா இருக்கா? போக போக இன்னும் பயங்கரமா இருக் கும்” என முதலமைச்சர் இதற்கும் Punch Dialogue அடிக்காமல் இருக்க வேண்டும்.”

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது முகநூலில் பதிவிட்டுள்ளார்.

பா.ஜ.க.வுடன் ரகசிய உறவில் இருக்கும் த.வெ.க.வைக் கண்டிக்கத் துப்பில்லாத காங்கிரஸ்!

முதல் பக்கத் தொடர்ச்சி

மாநிலத்தில் 2025ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தல் முடிவுகள் வெளியான பின்பு, நவம்பர் 15 அன்று மிக ஆழமான ஒரு கருத் தினைக் கழகத் தலைவர் அவர்கள் பதிவிட் டார். காங்கிரஸ் கட்சியின் பிடிவாதத்தால் அங்கு கூட்டணியில் தொகுதிப் பங்கீட்டில் நிகழ்ந்த பிரச்சினைகள், ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சா கூட்டணியை விட்டே வெளியேறித் தனியாகப் போட்டியிட்டது, பல தொகுதிகளில் ராஷ்ட்ரிய ஜனதா தளம் - காங்கிரஸ் - இடது சாரிகள் என ஒரே கூட்டணியைச் சேர்ந்தோர் ஒருவரை ஒருவர் எதிர்த்துக் களம் கண்டது ஆகியவற்றைக் குறிப்பாலுணர்த்தி, காங்கி ரஸ் இவற்றைச் சரிசெய்துகொள்ள வேண்டு மென அதில் அறிவுறுத்தி இருந்தார்.

ஆனால், இவை எதுவுமே தேர்தல் ஆணையம் செய்த தவறுகளை நியாயப்படுத்தி விட முடியாது எனவும், தேர் தல் ஆணையத்தின் மீதான மதிப்பு இதுவரை இல்லாத அளவு சரிந்துபோய் உள்ளதாகவும் கழகத் தலைவர் அவர்கள் அதே பதிவில் மிகக் கடுமையாகத் தேர்தல் ஆணையத் தைச் சாடியிருந்ததை நினைவூட்டுவது தற் போதைய அரசியல் சூழலில் அவசியமாகி றது.

பீகாரில் நடந்தது தமிழ்நாட்டில் நடந்துவி டக் கூடாதெனக் கழகச் செயல்வீரர்கள் இயன் றவரை உழைத்தும், பல பேரின் வாக்கு ரிமை பறிபோனது. இவர்கள் போலி வாக்காளர்கள் அல்ல. பல ஆண்டுகளாக ஒரே முகவரியில் வசித்து வருபவர்களின் பெயர்களே வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டு இருந்தது. மேற்கு வங்கம் போன்ற மாநிலங்களில் நிலைமை இன்னும் மோசமாக இருந்தது. இதுவே தேர்தல் முடிவு களிலும் பிரதிபலித்தது.

எனவே, மற்ற இரு தேர்தல் ஆணையர் களின் எதிர்ப்பையும் மீறி, இத்தகைய அநீ தியை முன்னின்று நடத்திய தலைமைத் தேர் தல் ஆணையர் ஞானேஷ்குமார் பதவிநீக்கம் செய்யப்பட்டு, உரிய விசாரணைக்கு உட்ப டுத்தப்பட வேண்டுமென இக்கூட்டம் வலியு றுத்துகிறது.

தீர்மானம் - 2

மாணவர் இயக்கங்களின் போராட்டங் களுக்குத் தி.மு.க. ஆதரவு

தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் அவர்கள் மற்ற இரு தேர்தல் ஆணையர்களின் மாறுபட்ட கருத்துகளைப் புறந்தள்ளி, அவர்களுக்கு விவரங்களைத் தெரிவிக்காமலும் தன்னிச்சையாகவும் ஒத்தி சைவு இல்லா முடிவுகளைப் பல நேர்வுகளில் எடுத்தது குறித்து ‘இந்தியன் எக்ஸ்பிரஸ்’ நாளேடு 23 செப்டம்பர் 2026 அன்று விரி வான புலனாய்வுக் கட்டுரையை முதற்பக்கத்தில் வெளியிட்டது. அதையடுத்து, தமிழ்நாட்டில் இருந்து முதல் கண்டன அறிக்கை கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களிடம் இருந்துதான் வந்தது. அரசியல் சட்டத்தை மதிக்காமல் தனியாவர்த்தனம் செய்து, அதிகார வரம்பு மீறல் செய்த தலை மைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமாரை உடனடியாகப் பதவிநீக்கம் செய்ய வேண்டும் என்று கழகத் தலைவர் அவர்கள் உறுதிபட அவ்வறிக்கையில் தெரிவித்திருந் தார். தொடர்ந்து தாராபுரம், மதுராந்தகம் இடைத்தேர்தல் பரப்புரைகளிலும் இதுகு றித்து வெளிப்படையாகக் கண்டனத்தை வெளிப்படுத்தினார்.

‘இந்தியன் எக்ஸ்பிரஸ்’ நாளேட்டில் வெளி யான கட்டுரையைத் தொடர்ந்து, கரப்பான் பூச்சி ஜனதா கட்சியும் பிற மாணவர் இயக்கங் களும் அக்டோபர் 10 அன்று டெல்லி ஜந்தர் மந்தரில் போராட்டம் நடத்த அழைப்பு விடுத் திருந்தனர். அவர்களின் போராட்டத்தை ஒடுக்க ஒன்றிய அரசு டெல்லி மாநிலத்தின் அனைத்து வாயில்களையும் பூட்டி வைத்த தையும், மாணவர்களின் மீது காவல்துறை யின் அடக்குமுறையை ஏவி விட்டதையும் கழகத் தலைவர் அவர்கள்தான் உடனடியா கக் கண்டித்தார்.

கரப்பான் பூச்சி ஜனதாக்கட்சித் தலைவர் கள் கைதுக்குக் கண்டனம்!

மேலும், அதே நாளில், முன்னாள் முதல மைச்சர்கள் அரவிந்த் கேஜ்ரிவால், பிணராயி விஜயன், மமதா பானர்ஜி, மாணிக் சர்க்கார் உள்ளிட்ட தலைவர்கள் கைது செய்யப்பட்ட தற்கும், “இது என்ன அறிவிக்கப்படாத நெருக் கடிநிலையா” எனக் கண்டனம் தெரிவித்தார். சென்னையிலும், போராடிய மாணவர்க ளைத் த.வெ.க. அரசு கைது செய்து அடைத்து வைத்தபோது, கழகத் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்பேரில், முன்னாள் அமைச் சர் மா. சுப்பிரமணியன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆ. இராசா மற்றும் தமிழச்சி தங்கபாண்டியன் ஆகியோர் மாணவர்களை விடுவிக்கக் கோரிப் போராட்டம் நடத்தினர். இதனையடுத்தே காவல்துறையினர் இளை ஞர்களை விடுவித்தனர்.

‘முதுகு குத்தி’யான காங்கிரசுடன் இணைந்து பங்கேற்க இயலாது!

சென்னை ஆர்ப்பாட்டத்தில் கனிமொழி ராஜாத்தி கருணாநிதி பங்கேற்பு!

அக்டோபர் 14 அன்று, கரப்பான்பூச்சி ஜனதா கட்சித் தலைவர்கள் சிறையில் அடைக்கப்பட்டதற்கும் தனது கண்டனத் தைக் கழகத் தலைவர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் பதிவுசெய்தார். இதற்கு, அக்கட்சி யின் நிறுவனர் அபிஜித் தீப்கே, திரிணாமூல் காங்கிரஸ் எம்.பி., டெரெக் ஓபிரையன், உள் ளிட்ட பலரும் நன்றி தெரிவித்துப் பதிவிட்ட னர். நேற்று கூட, சென்னையில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் கழக நாடாளுமன் றக் குழுத் தலைவர் கனிமொழி ராஜாத்தி கருணாநிதி அவர்கள் கலந்துகொண்டது குறிப்பிடத்தக்கது.

எனவே, S.I.R. இரத்து செய்யப்பட வேண் டுமென்பதிலும், தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் பதவிநீக்கம் செய்யப்பட வேண்டுமென்பதிலும் கழகத்தின் நிலைப்பாடு தெளிவானது; உறுதியானது; நிலையானது. இதற்காக ஜனநாயகச் சக்திகள் முன்னெடுக்கும் போராட்டங்களுக்குக் கழ கம் தனது முழு ஆதரவைத் தெரிவித்துக் கொள்கிறது. அதேவேளையில், ‘முதுகு குத்தி’ யான காங்கிரஸ் கட்சியுடன் இணைந்து திரா விட முன்னேற்றக் கழகம் எந்த நடவடிக்கை யிலும் பங்கேற்க இயலாது என்பதையும் ஏற்கெனவே தெளிவுபடுத்தியுள்ளதை இக்கூட் டம் மீண்டும் சுட்டிக்காட்டக் கடமைப்பட் டுள்ளது.

தீர்மானம் - 3

இரட்டை வேடம் போடும் காங்கிரஸ் - த.வெ.க.வுக்குக் கண்டனம்

தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமாரின் அதிகார வரம்பு மீறலுக்கு எதிராகவும், மக்களின் வாக்குரிமையைப் பறிக்கும் S.I.R.க்கும் எதிராகவும் மாணவர் கள், இளைஞர்கள் நடத்தும் போராட்டம் மாபெரும் எழுச்சியை இந்திய அளவில் ஏற்ப டுத்தியுள்ளது. காங்கிரசால் இத்தனை ஆண் டுகளாகச் செய்ய முடியாத ஒன்றை இளைஞர் கள் தன்னெழுச்சியாக நடத்திக் காட்டியுள்ள தைக் கண்டு அரண்டுபோயுள்ள காங்கிரஸ் கட்சி, முதலில் விலகி நின்று வேடிக்கை பார்த் ததை நாடறியும். பின்பு, அதற்குப் பெருகும் ஆதரவினால் வேறு வழியில்லாமல் அவர்க ளது போராட்டத்தில் இணைந்து ஆதரிப்பதா கத் தற்போது காட்டிக் கொள்ள வேண்டிய நெருக்கடிக்கு ஆளாகியுள்ளது.

அடுத்தவர் உழைப்பைத் திருடித் தின்ப தும், பிறர் முதுகில் சவாரி செய்துவிட்டு முது கில் குத்துவதும் காங்கிரஸ் கட்சியின் பிறவிக் குணம் என்பதைக் கடந்தகால அரசியல் வர லாற்றை அறிந்தவர்கள் உணர்வார்கள். எனவே இதில் ஆச்சரியப்பட ஒன்றும் இல்லை. ஆனால், இந்திய அளவில் S.I.R.ஐ எதிர்ப்பதாக நாடகமாடும் காங்கிரஸ் கட்சி, கேரளம் மற்றும் தமிழ்நாடு குறித்துப் பேச மறுப்பது இரட்டை நிலைப்பாடு ஆகும். S.I.R. இல் தவறுகள் நடந்திருக்கின்றன என்றால் அது எல்லா மாநிலங்களுக்கும் பொருந்தும். மாநிலத்துக்கு ஒரு நிலைப்பாடு என மாற்று வது இரட்டை வேடமே.

த.வெ.க.விடம் சுரண்டித்தின்னும் காங் கிரசில் சிலர்!

குறிப்பாகத் தமிழ்நாட்டில், அதிகமாக வாக் காளர்கள் நீக்கப்பட்ட தொகுதிகளில் எல்லாம் தமிழக வெற்றிக் கழகம் வெற்றி பெற்றுள் ளதை ’பிசினஸ் லைன்’ நாளேடு புள்ளிவிவரங்களுடன் சுட்டிக்காட்டிச் செய்தி வெளியிட்ட பின்னரும், தமிழ்நாட்டில் எல்லாம் சரியாக நடைபெற்றுள்ளது என அவர்கள் கூறி வருவது பச்சையான, அருவருப்பான சந்தர்ப்பவாதம் ஆகும். அதிலும், காங்கிரஸ் கட்சியில் இருந்து கொண்டே த.வெ.க.விடம் சுரண்டித் தின் னும் ஒருசிலர், ‘கொடுத்த காசுக்கு மேல் கூவி’ வருவதையும் மக்கள் பார்த்துக்கொண்டு தான் இருக்கின்றனர்.

த.வெ.க. திரைமறைவில் நடத்தும் திருட்டு அரசியல்!

ஒருபுறம், த.வெ.க.வைச் சேர்ந்த முன்ன ணித் தலைவர்கள் “S.I.R.ஐ எதிர்க்கிறோம் என்றும், S.I.R. இல்லாமல் இருந்திருந்தால் 170 தொகுதிகளை வென்றிருப்போம்” என் றும் பேசி வருகின்றனர். நேற்று முன்தினம் த.வெ.க.வுடன் ஒரே மேடையில் நின்று போராட்டம் நடத்திய ஜனநாயக சக்திகள், அக் கட்சித் தலைவர் விஜய் இதுவரை S.I.R. குறித்தோ ஞானேஷ் குமாரைப் பதவிநீக்கு வது குறித்தோ பேச மறுப்பது, தேர்தல் ஆணையம் நியமித்த தலைமைச் செயலா ருக்குத் த.வெ.க. அரசில் பணி நீட்டிப்பு வழங் கப்படுவது, சட்டமன்றத் தேர்தலுக்கு முன்பு, ஒன்றிய பா.ஜ.க. அரசால் தமிழ்நாட்டுக்குப் பொறுப்பு ஆளுநராக நியமிக்கப்பட்டவர் தற் போது முழுநேர ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளது ஆகிய அனைத்தும் திரைமறைவில் நடைபெறும் நேர்மையற்ற ‘திருட்டு அரசியல்’ காரணமாகத்தான் என் பதை உணரும் காலம் விரைவில் வரும்.

S.I.R. குறித்து கழகத்தை விமர்சிக்கும் காங்கிரஸ் கட்சி, இந்தியா கூட்டணி சார்பில் உச்சநீதிமன்றத்தில் கூட்டாகத் தாக்கல் செய் யப்பட்டுள்ள வழக்கில், விஜய் ஏன் இணைய வில்லை எனக் கேட்கவில்லை. காங்கிரசின் ஆதரவை வாங்கிக் கொண்டு, பா.ஜ.க.வுடன் இரகசிய உறவில் இருக்கும் த.வெ.க.வைக் கண்டிக்கத் துப்பில்லாத காங்கிரஸ் கட்சி தி.மு.க. மீது குற்றம் சுமத்துவது நகைப்புக் குரியது.

ஊரை ஏமாற்ற ஒற்றை மனிதராக வந்த அமைச்சர்!

S.I.R. குறித்து தேர்தலுக்குப் பிறகு எதை யும் பேசாத விஜய் அவர்கள் இந்தியா கூட்ட ணியின் சார்பில் நடத்தப்பட்ட கூட்டத்திலும் போராட்டத்திலும் எங்கேயும் பங்கேற்க வில்லை. அந்தக் கூட்டத்தில் த.வெ.க.வில் இருந்து, ஊரை ஏமாற்ற ‘ஒற்றை மனிதராய்’ கண்துடைப்புக்காக வந்து பேசிய அமைச்சர் ராஜ்மோகனின் வாயில் இருந்தும் ‘பா.ஜ.க.’ என்றோ, ‘தேர்தல் ஆணையம்’ என்றோ, ‘ஞானேஷ் குமார்’ என்றோ தப்பித் தவறியும் வரவில்லை என்பதை நடுநிலையாளர்கள் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறார்கள்.

இப்படி தொடர்ந்து இரட்டை வேடம் போட்டு மக்களை ஏமாற்றப் பார்க்கும் காங்கி ரஸ் கட்சிக்கும், தமிழக வெற்றிக் கழகத்துக் கும் இக்கூட்டம் தனது கடும் கண்டனத்தைப் பதிவு செய்வதுடன், கூட்டணியில் இல்லாத கழகத்தை இனியும் வம்புக்கு இழுத்து வாங்கிக் கட்டிக்கொள்ள வேண்டாம் என்றும் இக்கூட்டம் எச்சரிக்கிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

அடுத்தவர் உழைப்பைத் திருடித் தின்பது காங்கிரசின் பிறவிக்குணம்!

- **அடுத்தவர் உழைப்பைத் திருடித் தின்பதும், பிறர் முதுகில் சவாரி செய்துவிட்டு முதுகில் குத்துவதும் காங்கிரஸ் கட்சியின் பிறவிக் குணம் என்பதைக் கடந்தகால அரசியல் வரலாற்றை அறிந்தவர்கள் உணர்வார்கள், எனவே இதில் ஆச்சரியப்பட ஒன்றும் இல்லை.**
- **காங்கிரஸ் கட்சியில் இருந்துகொண்டே த.வெ.க.விடம் சுரண்டித் தின்னும் ஒருசிலர், ‘கொடுத்த காசுக்கு மேல் கூவி’ வருகின்றனர்.**

கூட்டணியில் இல்லாத கழகத்தை வம்புக்கு இழுத்து வாங்கிக் கட்டிக் கொள்ள வேண்டாம்!